இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 21-08-2025

# இணையவழியில் பயிர்க் கடன்கள்!

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு முன்மாதிரியான ஒருதிட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். வேளாண் பெருமக்கள் இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழியாக பயிர்க் கடன் வழங்கும் திட்டம்தான் அது!

**கடந்த 17 ஆம் தேதியன்று தருமபுரியில், இணைய வழியில் பயிர்க்கடன் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். பயிர்க் கடன் பெறுவதற்காக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்துக்கு இனி நேரில் வரத் தேவையில்லை. இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். ஒரு வார காலம் காத்திருக்கத் தேவையில்லை. அன்றைய தினமே கடன் வழங்கப்பட்டுவிடும். இதனைத்தான் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள்.**

விண்ணப்பிக்கும் முறையும் எளிதாக்கப்பட்டுள்ளது. வேளாண் பெருமக்கள் அருகில் உள்ள சேவை மையத்துக்குச் சென்று விண்ணப்பிக்கலாம். தங்களது கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர் எண் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சேமிப்புக் கணக்கு எண்ணைக் கொடுத்தால் மட்டுமே போதுமானது. இந்த விண்ணப்பமானது வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை ஆகிய இருதுறைகளிலும் சரி பார்க்கப்படும். அன்றைய தினமே கடன் தொகையானது வேளாண் பெருமக்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். அதிகபட்சமாக 5 லட்சம் ரூபாய் வரை பயிர்க் கடன் வழங்கப்படும்.

**தர்மபுரியில் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டமானது அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதை விட முக்கியமாக பயிர்க்கடன் வாங்க எளிமையான முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதைப் போலவே சுய உதவிக் குழுக்களுக்கான கடனும், சிறு குறு கடன்களும் எளிமைப்படுத்தப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.**

தமிழ்நாட்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெல், கரும்பு, பருத்தி, நிலக்கடலை, மக்காச்சோளம் ஆகியவற்றைப் பயிரிட பயிர்க் கடன்கள் வழங்கப்படுகின்றன. நாட்டில் கடன் வழங்கும் திட்டங்கள் ஏராளமாக உள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் அதிகபட்சம் மூன்று லட்சம் வாங்கி, ஓர் ஆண்டுக்குள் செலுத்தி விட்டால் வட்டி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற நடைமுறையும் இருக்கிறது. ஆனால் உடனடியாக கடன் வழங்கும் திட்டம் என்பது இப்போதுதான் தொடங்கப்பட்டுள்ளது. அதுவும் ஒரே நாளில் வழங்கும் திட்டமாக இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வடிவமைத்துள்ளார்கள்.

பயிர்க் கடன் வாங்குவதற்கு பட்டா, சிட்டா, அடங்கல், கிராம நிர்வாக அலுவலர் சான்று, குடும்ப அட்டை ஆகியவற்றை வழங்க வேண்டும். இதனை வாங்கி விண்ணப்பிப்பதற்குள் தாமதம் ஆகிவிடுகிறது என்று வேளாண் பெருமக்கள் சொல்லி வந்தார்கள். அதனைப் போக்கி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

இந்த ஆண்டு ரூ.17 ஆயிரம் கோடி வரை பயிர்க்கடன் வழங்கப்படும் என்றும், 3 ஆயிரம் கோடி ரூபாய் கால்நடை வளர்ப்புப் பிரிவு கடன் வழங்கப்படும் என்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரிய கருப்பன் அறிவித்து இருந்தார். கடந்த ஆண்டில் 15 ஆயிரத்து 62 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனை 17.37 லட்சம் விவசாயிகள் பெற்றார்கள். 4.43 லட்சம் பேருக்கு 2 ஆயிரத்து 645 கோடி ரூபாய் கால்நடை வளர்ப்புப் பிரிவு கடன்கள் வழங்கப்பட்டன. இதனை இந்த ஆண்டு அதிகப்படுத்தி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். பயிர்க் கடன் வழங்கும் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடன் வாங்கும் முறையும் எளிமைப் படுத்தப்பட்டுள்ளது.

**திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு மண்ணும் செழித்துள்ளது. வேளாண் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. பாசனப் பரப்பும் அதிகரித்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 457.08 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடையப்பட்டுள்ளது. 2020 21 ஆம் ஆண்டில் எக்டருக்கு 2,235 கிலோவாக இருந்த உணவு தானியப்பயிர்களின் உற்பத்தித்திறன் 2024 25 ஆம் ஆண்டில் 2,871 கிலோவாக அதிகரித்துள்ளது. கேழ்வரகு உற்பத்தியில் முதலிடம், மக்காச்சோளம், மொத்த எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பில் இரண்டாம் இடம், குறுதானியங்கள் மற்றும் நிலக்கடலையில் மூன்றாம் இடம் என்ற அளவில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.**

இந்த வளர்ச்சியை அதிகரிப்பதற்காகத்தான் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மொத்தமுள்ள 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது, கடந்த நான்கு ஆண்டுகளில் பத்தாயிரத்து 187 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 52 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 47 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் மீண்டும் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டு வேளாண் பயிர்கள், பழமரக்கன்றுகள், மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு பசுமை போர்த்தியுள்ளன.

இந்த நிலையில் நெல் கொள்முதல் விலையையும் முதலமைச்சர் அவர்கள் அதிகரித்துள்ளார்கள். விவசாயிகள் இனி குவிண்டாலுக்கு 2500 ரூபாய் பெறுவார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன் அறிவித்துள்ளார்கள். சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு 2500 ரூபாய்க்கும், சன்னரக நெல் குவிண்டாலுக்கு 2,548 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதாவது சாதாரண ரகத்துக்கு 131 ரூபாயும், சன்ன ரகத்துக்கு 156 ரூபாயும் உயர்த்தி வழங்கி இருக்கிறார் முதலமைச்சர். இதனால் 10 லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

**வேளாண் மக்களின் மனங்களை மகிழ்விப்பதன் மூலமாக உணவுப் பொருள் உற்பத்தியையும் அதிகரிக்கும் முதலமைச்சரின் நல்ல எண்ணத்தின் வெளிப்பாடுகள் இவை.**

• •

## கூட்டணிக் கட்சித் தலைவர்கள் நேரில் வாழ்த்து!

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் 50வது திருமண நாள்!

### வாழ்த்தியவர்களுக்கு முதல்வர் சமூக வலைதளத்தில் நன்றி!

சென்னை, ஆக.21-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது 50வது திருமண நாளை முன்னிட்டு வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**உயிரென உறவென திருமிகு துர்கா அவர்கள் என்னில் பாதியாய் இணைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன.**

**இத்தருணத்தில் பேரன்புகொண்டு இல்லம்தேடி வந்து எங்களை வாழ்த்திய கொள்கை உறவுகளான தோழமை இயக்கத் தலைவர்களுக்குக் குடும்பப் பாச உணர்வுடன் நன்றி கூறி அகமகிழ்கிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 50–வது திருமண நாளையொட்டி நேற்று முன்தினம் (19.8.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் பெ.சண்முகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான கமல்ஹாசன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான தி.வேல்முருகன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.8.2025) சென்னையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னாள் வாகன ஓட்டுநர் எம்.டி. சஞ்சீவி அவர்களின் பேத்தி காவ்யா – விக்னேஷ்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## முன்னாள் அமைச்சர் அ.ரகுமான்கான் எழுதிய நூல்கள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிடுகிறார்! அமைச்சர் துரைமுருகன் பெற்றுக்கொள்கிறார்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்றுப் பேசுகிறார்!

சென்னை, ஆக. 21-

சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் இன்று (21.08.2025 - வியாழக்கிழமை) காலை 9 மணியளவில் மறைந்த கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அ.இரகுமான்கான் எழுதிய 5 நூல்கள் மற்றும் அவரது சட்டமன்றப் பேருரைகள் அடங்கிய ‘இடி முழக்கம் இரகுமான்கான்’ நூலினை கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிடுகிறார்.

இந்நிகழ்வுக்கு, துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை ஆற்றுகிறார்.

1977 முதல் 1987 ஆம் ஆண்டு வரை தமிழக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து கலைஞரின் பாசறைத் தளபதியாக விளங்கிய இரகுமான்கான் அவர்களின் ‘சட்டமன்ற உரைகள்’ மற்றும் முரசொலி கட்டுரைகளின் தொகுப்பான ‘நியாயங்களின் பயணம்’, கவிதை நூல்களான ‘மௌனமாய் உறங்கும் பனித்துளிகள்’, ‘உலகமறியா தாஜ்மஹால்’, பூ பூக்கும் இலையுதிர்காலம் மற்றும் வானம் பார்க்காத நட்சத்திரங்கள் உள்ளிட்ட நூல்களை கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் வெளியிட கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

இந்நிகழ்வில், அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள், பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக, இரகுமான்கான் அவர்களின் குடும்பத்தினர் சார்பாக அவரது மகனும், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் செயலாளருமான டாக்டர். அ.சுபேர் கான் எம்.எஸ் (ஆர்த்தோ) நன்றியுரை ஆற்றுகிறார்.

# நீடாமங்கலம் பேரூராட்சியில் மக்கள் நலத்திட்டங்கள்!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா துவக்கி வைத்து பட்டாக்களை வழங்கினார்!

*திருவாரூர், ஆக.21-*

*திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் பேரூராட்சிக்கு, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர். டி. ஆர். பி. ராஜா ரூ.22.43 லட்சம் மதிப்பீட்டில் புதிய பொது சுகாதார வாகனங்களை வழங்கியதோடு , பழைய நீடாமங்கலம் மேலத்தெருவில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை திறந்து வைத்து, பழைய நீடாமங்கலம் மற்றும் காங்கேயன் திடல் பகுதி மக்களின் வீடுகளுக்கு நேரடியாக நடந்து சென்று பட்டாவினை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் உடன் இருந்தார்.*

*திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் பேரூராட்சிக்கு ரூ.22.43 லட்சம் மதிப்பீட்டில் 01 டிராக்டர், 01 டாடா ஏசி, 03 பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் என 05 புதிய பொது சுகாதார வாகனங்களை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.*

*தொடர்ந்து, பழைய நீடாமங்கலம் மேலத்தெருவில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி. ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார்கள்.*

*மேலும் நீடாமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட காங்கேயம் பகுதியில் 12 பயனாளிகளுக்கும், மேலத்தெரு பகுதியில் 7 பயனாளிகளுக்கும், கீழத்தெரு பகுதியில் 35 பயனாளிகளுக்கும் என மொத்தம் 54 பயனாளிகளின் வீட்டிற்கு நேரடியாக நடந்து சென்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா பட்டாக்களை வழங்கினார்கள்.*

*இந்நிகழ்வில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், ஒன்றிய செயலாளர் கே.வி.கே.ஆனந்த், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன், பேரூராட்சி மன்றத் தலைவர் ரா.ராமராஜ், மாவட்ட மகளிர் அணித் தலைவர் ராணி சேகர், வட்டாட்சியர் சரவணன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.*